செ.வெ.எண்.57 நாள்.01.02.2018

**<u>காஞ்சிபுரம் மாவட்டம்</u>**

**<u>வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் வேடல் மற்றும் வேளியூர் கிராம ஊராட்சிகளில் 100 பயனாளிகளுக்கு ரூ.40 இலட்சத்து 45 ஆயிரம் மதிப்பிலான கறவை பசுக்களை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.</u>**

*************

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், வேடல் ஊராட்சியில் 50 பயனாளிகளுக்கு தலா ரூ.40,450/– மதிப்பிலான கறவைப்பசுக்களையும், வேளியூர் ஊராட்சியில் 50 பயனாளிகளுக்கு தலா ரூ.40,450/– மதிப்பிலான கறவைப்பசுக்களை மாண்புமிகு அமைச்சர் வழங்கினார். கறவைப்பசுக்களை வழங்கி பேசிய மாண்புமிகு அமைச்சர்,

மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள், ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தீட்டிய உன்னதமான திட்டம் தான் விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டமாகும். கறவைப்பசுக்களை பெற்றவர்கள் அதனை முறையாக பராமரித்து அப்பசுக்கள் ஈன்ற கன்றுகளும், கறவை பசுக்களாக வளர்ந்து வருமானம் தருகின்றன. இத்திட்டத்தினால் ஏழை மக்களின் பொருளாதார முன்னேற்றம் அடைய முடிகிறது. இத்திட்டத்தின் மூலம் வறுமை நிலையில் இருந்த தாய்மார்கள் இன்று தங்கள் சொந்த காலில் நின்று தொழில் புரிகின்றனர். பால் கறந்து கிடைக்கின்ற வருமானத்தை கொண்டு தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க முடிகிறது. அந்த நிலையிலும் மற்றவர்களை குடும்ப உறுப்பினர்களை நம்பியிராமல் வருமானம் ஈட்டுவதின் மூலம் தங்கள் பிள்ளைகளின் திருமணச் செலவிற்கும், மருத்துவ செலவு உள்ளிட்ட இதர செலவிற்கும் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஆறு (2011–12 முதல் 2016–17) ஆண்டுகளில் 93 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 4650 பயனாளிகளுக்கு ஒவ்வொருக்கு ஒரு கறவை பசு என்ற வீதத்தில் 4,650 கறவைப்பசுக்கள் மற்றும் 625 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 28,690 பயனாளிகளுக்கு ஒவ்வொருக்கு நான்கு (மூன்று பெட்டை+ ஒரு கிடா) ஆடுகள் வீதம் 1,14,760 ஆடுகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில் கடந்த ஆறு ஆண்டுகளில் விலையில்லா கறவைப்பசுக்கள் வழங்கப்பட்ட 93 கிராம ஊராட்சிகளில் பால் கொள்முதல் செய்ய கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்பட்டு ஆவின் நிறுவனத்திற்கு பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது .

இங்கு இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த அனைவரும் பொருளாதாரத்தில் மேன்மையடைந்து சிறந்து விளங்க என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது,

நடப்பாண்டில் 18 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 900 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்களும், 151 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 6505 பயனாளிகளுக்கு 26,060 விலையில்லா வெள்ளாடுகள் வாங்கி வழங்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்வழி, ஆகஸ்ட் 2017 முதல் ஜனவரி 2018 முடிய 15 கிராம ஊராட்சிகளில் 1 கிராம ஊராட்சிகள் 50 பயனாளிகள் வீதம் 750 பயனாளிகளுக்கு 699 கறவைப்பசுக்களும் (ஒவ்வொருக்கு ஒரு கறவைப்பசு ரூ.35,000/– மதிப்பில்) மற்றும் 107 கிராம ஊராட்சிகளில் ( ஒரு பயனாளிக்கு நான்று (3 பெட்டை+1 கிடா) ஆடுகள் ரூ.10,000/–மதிப்பில்) 4,250 பயனாளிகளுக்கு 17,000 ஆடுகள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஆதரவற்ற ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் திட்டமிடப்பட்ட தமிழக அரசின் இந்த மேன்மையான விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் மக்கள் பயனடைந்து தங்கள் வாழ்க்கையில் மேன்மைடைய என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வாலாஜாபாத் திரு. பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், முன்னாள் மாவட்ட ஊராட்சிமன்ற தலைவர் திரு.காஞ்சி பன்னீர்செல்வம், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் (பொ) திரு.ரஞ்சித், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் திரு.பால்ராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.